1968 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பட்டிகளில் அடைக்கப்பட்டிருக்கும் கால்நடைகளுக்கு சரியான தீவனம் போடுகிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்னை. பட்டியில் அடைக்கப்பட்ட மாடுகள் சில தீவனம் சரியாக எடுத்துக் கொள்வதில்லை.

திரு. நா. காசிராமன் : நகரில் கட்டுப்பாடின்றி கால்நடைகள் திரிவதால் அதிலும் குறிப்பாக எருமை மாடுகள் திரிவதால் போக்குவரத்து விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் இவற்றைக் கண்டால் வெறித்துக் கொண்டு ஓடும்போது எந்தவிதமான விபத்து ஏற்படும் என்று சொல்ல முடியாத அளவிற்கு விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதைப்பற்றி காவல்துறை அதிகாரிகளிடம் சொல்லி சட்டத்தை நன்கு இயக்கி இந்தக் கால்நடைகள் திரியாதபடி பார்த்துக் கொள்ள அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : காவல்துறை இது விஷயத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால், பொது மக்கள் இந்தப் பழக்கத்தை விட்டு விடவேண்டுமென்று பொது மக்களின் பிரதிநிதிகளான நம் நண்பர் காசிராமன் அவர்களைப் போன்றவர்கள்தான் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பவுண்டில் அடைக்கப்பட்ட கால் நடைகளுக்கு 50 காசு விதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த 50 காசு என்ற அபராதத்தை 2 ரூபாய் அல்லது மூன்று ரூபாய் என்று போட்டால் இதை ஓரளவிற்குத் தடுக்க முடியும். ஆகவே இந்த 50 காசு என்பதை உயர்த்தி மூன்று ரூபாய் என்று வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நண்பர் அவர்கள் என் பதிலில் உள்ள 50 காசு என்ற பகுதியினை மட்டும்தான் கவனித்திருக்கிறார்கள். ஆகவே, அதைவைத்துக் கேட்கிறார். பதிலின் இறுதியில் அந்தக் கட்டணத்தை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். அதை விவாதிக்கிறபோது மூன்று ரூபாய் என்று திரு. ராமசாமி அவர்கள் சொன்னதை நினைவில் வைத்துக்கொள்வேன்.

Screening of Hindi films

* 44 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to offer police protection to the screening of Hindi films in Madras City theatres?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : திரைப்பட மாளிகை உரிமையாளர்கள் தங்கள் திரைப்பட மாளிகைகளில் இந்தி படங்களைத் திரையிட விரும்பினால், அவர்களுக்கு பாது காப்பு அளிக்கப்படுமென்று அரசாங்கம் ஏற்கெனவே உறுதி அளித்துள்ளது. அத்தகைய படங்களைத் திரையிடுவதால் தொல்லை ஏற்படுமெனத் திரைப்பட மாளிகை உரிமையாளர்கள் அஞ்சினால் அவர்கள் காவல் துறையின் பாதுகாப்பினை வேண்டிப் பெறலாம்.

சென்னை மாநகரிலும் வெளியூர்களிலும் இந்தி படங்கள் திரையிடப்பட்டு வருவதால், இவற்றிற்குக் காவல்துறை பாதுகாப்பு அளிக்கும்.

வினா எழவில்லை.

DR. H. V. HANDE : Many friends here have made disparaging and flippant remarks abut the standard of films produced here in Madras. At the same time many of us are really proud of the very high quality of pictures produced in Tamilnad. Will the Hon. Chief Minister tell us whether Government have taken any concrete steps to increase production of films in Madras State and will the Government come forward to construct some film studios in Madras, as has been done in Mysore State, wherein film producers can pay some nominal charge and produce films?

THE HON. THIRU C. N. ANNADURAI : As far as Madras is concerned there are first-class studios here which are the envy of other parts of the country. I do not think that Government entering into building of studios will improve matters in any way. Our studios are maintained at a very high standard.

THIRU K. VINAYAKAM : I remember the hectic days when Hindi films could not be screened in the City of Madras. Were there any requests made by theatre owners to the Police Department so that the police can give protection and are there instances wherein the police people, using their discretion, refused to give police protection with the result, Hindi films were not screened in those days?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have no such instances to cite.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்திப் படங்களுக்குத் தமிழகத்திலே பாதுகாப்பு அளிக்க நாம் நல்ல மனதுடன் முன் வருவதுபோல மற்ற மாநிலங்களில் தமிழ்ப்படங்கள் வெளியிடப் படும்பொழுது மற்ற மாநில சர்க்கார்கள் அதற்கு ஊக்கம் தருகிறார்களா, பாதுகாப்பு தருகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மற்ற மாநிலங்களில் இங்கே இந்திப் படங்கள் வெளியிடப்படுவதுபோல் தமிழ்ப் படங்கள் தொடர்ந்து வெளியிடப்படுவது இல்லை. ஞாயிற்றுக் கிழமை காலைக் காட்சிகள் என்ற முறையில் அவைகள்

வெளியிடப் படுகின்றன. அதற்குக்கூட சில மாநிலங்களில் எதிர்ப்பு வந்தபொழுது அந்த மாநில அரசு தகுந்த பாதுகாப்பு கொடுத்து அவைகளெல்லாம் சரிவர நடக்கும்படி பார்த்துக் கொண்டன.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், தமிழக அரசு எடுக்கக் கூடிய மாதாந்திர செய்திப்படங்களை இந்தியிலும், ஆங்கிலத்திலும் தயாரிப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதுவரையிலே அந்த வகையான எண்ணம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபிறகு அந்தக் கருத்து தெரிய வருகிறது. இது சம்பந்தமாக பண விஷயத்தைக் கவனித்துத்தான் அதைச் செயல்படுத்த முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அமைச்சரவைமீது நம்பிக்கையின்மைத் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அவருடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மூவரும், திரு. சி. என். அண்ணாதுரை அவர்களுடைய தலைமையின்கீழ் நடக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்து சட்டப் பேரவை விதி 55-ன்கீழ் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்திற்கு இந்தப் பேரவையின் அனுமதி இருக்கிறதா என்பதை, அறிந்து கொள்ள வேண்டும். அனுமதி வழங்க ஆதரவாயுள்ள உறுப்பினர்கள் எழுந்து நிற்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல், அனுமதி வழங்க ஆதரவாயுள்ள உறுப்பினர்கள் எழுந்து நின்றிருப்பதால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதென்று அறிவிக்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைக் கூட்டி, என்றைக்கு இதன்மீது விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்பதை அறிந்து, பேரவைக்குத் தெரிவிக்கிறேன்.

அடுத்து 41-வது விதியின்கீழ், திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.